RS Polyclinic
OUR RESPECTED DOCTORS
Dr M. Rajkumar
MBBS MS DNB(MCH Institute) Sr Vascular Surgeon
98410 25996
Dr K. Namitha Bhuvaneswari
MS (Opt) DO MBBS Sr Eye Surgeon
9444 288784
Dr Sathish Rajkumar
MBBS MS FMAS Laparoscopic & Laser Surgeon
9445 401793
Dr Shanthi R
MBBS MS (MCH Institute) Sr Vascular Surgeon
9884 650945
Dr Salins R
MBBS MD General Physician
87780 87742
Dr Praveena E
MBBS MS (ENT) Sr ENT Surgeon
9944 100443

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 22 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 134

வாய்கிழிய வசனம் பேசிய முதல்வருக்கு உறுத்தவில்லையா? கனிமொழி கேள்வி!

சென்னை – 22 நவம்பர், 2026 தவெக ஆட்சியில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை என்று திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி குற்றஞ்சாட்டியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம் வேதமாணிக்கபுரத்தில் 11-ஆம் வகுப்பு மாணவி ஒருவர் வீட்டுக்குள் புகுந்து கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து, தாக்குதல் நடத்திய நபரும் தற்கொலைக்கு முயன்றுள்ளார். இதையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் கருத்து தெரிவித்துள்ள கனிமொழி, மாணவி வீட்டுக்குள் புகுந்து கொலை செய்யப்பட்டிருப்பது மிகுந்த அதிர்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் பெண்களுக்கு எங்கும் பாதுகாப்பில்லாத நிலை உருவாகியுள்ளதாகவும், வீடுகளுக்குள்ளேயே பெண்கள் தாக்கப்படுவதும் கொல்லப்படுவதும் அன்றாடச் செய்திகளாக மாறி வருவதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

பெண்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட சிங்கப் பெண் அதிரடிப்படை எங்கே செயல்படுகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பெண்களின் பாதுகாப்பு குறித்து மேடைகளில் பேசிய முதல்வர் விஜய், தற்போது நடைபெறும் இத்தகைய குற்றச் சம்பவங்கள் குறித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், இந்தச் சம்பவங்கள் அவருக்கு எந்த உறுத்தலையும் ஏற்படுத்தவில்லையா என்றும் கனிமொழி கேள்வி எழுப்பியுள்ளார்.